முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 784**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**21.11.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவசியாக வாழும் தேசிகனே
ஆறுமுகன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் பிலவ தேள்திங்கள் தன்னில்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 05ம் நாள், 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
2. தன்னிலே அரங்கன் தர்மமே
இந்த தரணியை காத்து வழிநடத்தும்
அண்ணல் உன் சன்மார்க்கமே
அகிலத்தில் ஞான ஆட்சிதனை தந்தருளும்
3. அருளவே அறமாக ஆற்றலாக
அரங்கன் உபதேசம் கலியுகத்தில் வலம்வர
வரமென அரங்கன் கொள்கை ஏற்று
வணங்கி ஞானவழி வருபவர் மூலமாகவே
4. ஆகவே ஆறுமுகன் யான் இந்த உலகில்
ஆன்மீக ஞான ஆட்சிதனை உருவாக்கி
மாட்சிமைபட பேரிடரில் இருந்து இந்த உலகத்தை மீட்டு
மாதவசி அரங்கன் சக்தி கொண்டு அற்புதம் நடத்துவேன்
5. நடத்தவே ஞானவான்களெனும் படையை
ஞானதேசிகன் ஓங்காரக்குடிலில் இருந்து உருவாக்கி வர
வருகின்ற இந்த ஞானவான்கள் கூட்டம் பெருகபெருக
வையகத்தில் ஞானிகள் ஆட்சியாக உருவாகி
6. தானதர்ம சக்திகொண்டு உலகமக்களெல்லாம்
தவசியாக தர்மவான்களாக நிலைபெற்று
நிலைபெற்று கலியுகத்தை ஞானயுகமாக மாற்றும்
நீதிவழி உலகோர் பின்தொடர்ந்து வந்து
7. வந்துமே அரங்கன் வழிகாட்டலில்
வையகம் ஞான ஆட்சி பெறக்கூடும்
மாட்சிமை பட இந்த அற்புதத்தை
மகான் சுப்ரமணியர் யானும் அரங்கனுள் நித்தம்நித்தம் வரமாகத் தந்து அருள்புரிந்து வருகின்றேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–